1973 நவம்பர் 20]

Production of cycle rickshaws

* 218 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether Tamil Nadu Small Industries Corporation Limited have commenced production of cycle-rickshaws; and

(b if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(ஆ) 1973 மே மாதம் முதல் 15—7—73 வரை 765 சைக்கிள் ரிக்ஷாக்கள் உற்பத்தி செய்யப்பட்டு, 707 சைக்கிள் ரிக்ஷாக்கள் விற்பனையானது.

THIRU N. DENNIS : May I know the total investment for the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது நம்முடைய டான்சி தொழிற்சாலை செய்வது. தனியாக முதலிட்டு தொழில் செய்ய வில்லை.

Small Car Project

* 219 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that the Government have addressed the Centre requesting the location in Tamil Nadu of a small car project during 1972; and

(b) if so, whether any reply has been received therefor?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) பயணிகள் கார் தொழிற்சாலையை பொதுத் துறையில் நிறுவுவதற்கு எந்த முடிவும் எடுக்கப்படவில்லையாதலால் அமைப்பிடம் பற்றிய கேள்வி எழவில்லை என்று மத்திய அரசு கூறியுள்ளது.

[முற்பகல் 9-30]

திரு. என். கே. பழனிசாமி : இம்மாதிரி ஒரு தொழிற்சாலை ஏற்பட்டால் அதற்கு எவ்வளவு மூலதனம் வேண்டும்? அதை ஜாயின்ட் செக்டாரில் நிறுவ ப்ரப்போஸல் அனுப்பப்பட்டதா? அல்லது சர்க்காரில் இருந்து நிறுவ ப்ரப்போஸல் அனுப்பப் பட்டதா?

[1973 நவம்பர் 20

மாண்புமிகு திரு. செ. மாதவன்: முதல் கேள்விக்குப் பதில், அப்புள்ளி விவரம் என்னிடம் இல்லை. இந்தத் தொழிற்சாலையை பொதுத் துறையில் ஆரம்பிக்க வேண்டும் என்ற ஒரு பரிசீலனையை மத்திய அரசு செய்து வந்தது. அதைத் தமிழ் நாட்டுக்குக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி வந்தோம். ஆனால் அந்தப் பிரச்னையை கைவிட்டுவிட்டார்கள். இதற்கிடையில் தனியார் சிலபேர்கள் வெளிநாட்டுத் தொழில் நுட்ப உறவு இல்லாது இங்கேயே ஆரம்பிப்பதற்காக முன் அனுமதி பெற்றிருந்தார்கள். கடைசியில் அவர்களும் இதுபோன்ற பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்குத் தொழில் நுட்ப அறிவு பெறவில்லை என்று முடிவெடுத்திருப்பதால் மேற்கொண்டுதான் முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த ஸ்டான்டேர்ட் மோட்டார் ஆலையை மூடியபோது தமிழக அரசு மத்திய அரசிடம் அவர்களே அதை ஏற்று நடத்துவதற்கு ஒரு ஆலோசனை சொன்னார்களே, அந்த ஆலோசனையை எந்த அளவிற்கு மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது? அல்லது அதை மாநில அரசு கைவிட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதை அப்போதே மத்திய அரசு ஏற்கவில்லை. இப்போது தொழிற்சாலை நடந்து வருவதால் அப்பிரச்னை எழவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, in view of the extreme shortage of petrol in the country and the consequent administrative breakdown due to non-availability of petrol, will this Government recommend to the Centre not to embark upon any further expansion of the Motor Car Industry or start any new industries till we are able to conquer this problem of petrol?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பெட்ரோல் பிரச்னை புதுப் பிரச்னை. அதை மத்திய அரசு எப்போது பரிசீலிக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். இந்தச் சிறிய கார் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் ஏற்கனவே மத்திய அரசு இதை கைவிட்டுவிட்டது.

1973 நவம்பர் 20]

திரு. சு. துரைசாமி : கோவையில் இருக்கிற டெக்ஸ்டூல் கம்பெனியை அரசு ஏற்று நடத்துகிறது. பாலசுந்தரம் அவர்கள் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பே ஒரு சிறிய கார் தயாரித்தார். அதை மீண்டும் தயாரிப்பதற்கு அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப்பற்றிய தகவல் இல்லை.

திருநெல்வேலி நீதி மன்றங்கள்.

* 220 வினா—**திரு. சங்கமுத்து தேவர் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் (கொக்கிரகுளம்) மாவட்ட நீதிமன்றம் மற்றும் அதைச் சார்ந்த மற்ற நீதி மன்றங்களையும் தற்போது கொக்கிரகுளத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) கொக்கிர குளத்தில் இப்போது செயல்பட்டு வருகின்ற எல்லா நீதிமன்றங்களும் ஒருங்கே அமையும் வகையில் கட்டிடம் ஒன்றை பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரி வளவில் கட்டுவது பற்றிய செயற்குறிப்பை அண்மையில் அரசு ஆராய்ந்தது. நிதி நெருக்கடியை முன்னிட்டு அந்தச் செயற் குறிப்பு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : இப்போது நடத்தப்படுகிற இந்தயிடத்திலேயே மேற்படி கட்டடங்களை நல்லமுறையில் கட்டுவதற்கான வசதி இருப்பதாகத் தெரிகிறதே, இந்த இடத்திலேயே அவற்றை அமைப்பதற்கு அரசாங்கம் பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த இடம் ஆற்றோரத்தில் இருக்கிறது. அந்த இடம் நல்ல இடமா அல்லது பாளையங்கோட்டை மருத்துவமனைக்குப் பக்கத்தில் உள்ள இடம் நல்ல இடமா என்பதில் கருத்து வேறுபாடு இருக்கிறது. திட்டமே தள்ளி வைக்கப்பட்டிருப்பதால் இப்பிரச்னை இப்போது எழவில்லை.